Regd No.M விலை அணா 1

குடிஅரசு

அய்யாவின் குடும்ப விளக்கு

அன்னை நாகம்மையார்

தொகுதி 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, மாசி 6. (18-2-48) புதன்கிழமை [ஒலி 6

அன்னை நாகம்மையார்!

பெரியார் ராமசாமி அவர்கள் இளைஞர் ராமசாமியாக இருந்த காலம் வரலாற்று ஆசிரியர்களுக்கு சுவையூட்டும் பகுதி.

பொதுவாழ்வில் அவருக்குக் கிடைத்த பட்டம் பெரியார். இளமையில்—சுயநல வாழ்வில் 'மைனர்-காலி'-என்ற மகுடங்கள் ராமசாமிக்கு அணிவிக்கப்பட்டிருந்தன. அவருடைய பத்தொன்பதாவதுவயதில் நாகம்மையார் வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர்ந்தார்கள். பருவகால மாறுதல்கள் அவர்களைப் பிணைப்பதற்கு முன் விளையாட்டுப் பருவத்திலேயே அந்தக் கொழுந்து உள்ளங்கள் கூடிக் குலாவிக்கொண்டன.

"நான் உன்னையே மணப்பேன். வேறு யாரையும் மணக்க மாட்டேன்" இந்த உறுதி தரும்பும் காதல் தொனி அந்த இளம் வீணைகளில் ஒரே சமயத்தில் அதிர்ந்து ஒலித்தது. இராமசாமிக்கு வயது 19! வாலிபம் அவருடைய உடற்கட்டில் நர்த்தனம் செய்த காலம்! 'பிள்ளையாண்டானுக்கு சிக்கிரத்தில் ஒரு கட்டையைக் கட்டிவிட வேண்டுமே' என்று பெற்றோர்கள் தீர்மானிக்கிற அளவுக்கு வாலிப ராமசாமி 'நல்ல பிள்ளை' என்று பெயர் எடுத்தார்.

நாகம்மையின் 13வது வயதில் பெண் கேட்கப் பலர் வந்து வந்து போயினர். அம்மையாரின் அபிப்பிராயத்தை ஆசைக்க முடியவில்லை. ராமசாமியின் உருவம் அழியாத ஓவியமாக தன் உள்ளத்தில் தீட்டப்பட்டிருப்பதை அவர்கள் காட்டத் தவறவில்லை. அந்தப் புதுமலரைப் பறித்துக்கொண்டு போக ஒரு ஆசைக்காரத் தாத்தாவும் வந்தார். இரண்டு மனவிகளை இழந்த அந்தக் கிழம் வாலிப ஓய்யாரங் கொட்டிக் கொண்டு சம்பந்தம் பேச வந்தது. நாகம்மா நெருப்பு மொழிகளை இறைத்தார்கள். அந்த அனல் வீச்சில் "மணந்தால் ராமசாமியை மணப்பேன்; இன்றேல் தற்கொலை செய்துகொண்டு இறப்பேன்," என்ற தீப்பொறிச் சொற்கள் தெரித்துக் கிளம்பி பெற்றோர்களின் பிடிவாதத்தைத் தீய்த்தன. 'லாயத்திலே தள்ளி அடைக்கப்படும் குதிரைக்கும் கனைத்திட உத்திரவுண்டு' என்ற புரட்சிக் கவிதைக்கு எடுத்துக் காட்டாக சிறுமி நாகம்மா நின்றார்கள். கிழமாப்பிளை வந்த வழியே கடையைக் கட்டினர். 13வயது சிறுமி தன் வாழ்வைத் தானே பண்படுத்திக் கொண்டார்.

இங்கே ராமசாமியாருக்கு செல்வக் குடும்பங்களில் பெண் தேடினர்கள். "சீமான் வீட்டுச்சிங்காரி தேவையில்லை. என் சிந்தையில் குடியேறியவள்தான் என் குடும்ப விளக்காக வேண்டும்" என்று கூறிவிட்டார் ராமசாமி.

தாய் தந்தையர் முடிவுப்படி தான் மணம் செய்துகொள்ள வேண்டுமென்று, மணமக்களை மந்தை மாடுகள் சேர்ப்பதென எண்ணியிருந்த காலமது. ஆம் 1898! அப்பொழுதே காதல்புரட்சி செய்தவர்கள் ராமசாமி—நாகம்மா!

வெற்றியின் சின்னமாக அவர்கள் திருமணம் அமைந்தது.

வெள்ளத்திலேயொரு வெள்ளமாய்க் கலந்துவிட்ட அவர்கள்

(2-ம பக்கம் பார்க்க)

(முதல் பக்க தொடர்ச்சி)

இன்பவாழ்வு, மூப்பத்தி ஐந்து ஆண்டுகள் கடைபெற்றது. 1933 வரையில்! ராமசாமி-நாகம்மா குடும்ப வாழ்க்கையில் சிந்த னையைக் இளறும் சிகழ்ச்சிகள் —பகுத்தறிவைத் தூண்டும் பல குறும்புகள்—பெண் உயர்வுக் கான சம்பவங்கள் பல! பல!

வாலிப ராமசாமி-வயதேறிய ராமசாமிப் பெரியாராக ஆன காலத்திலும் அம்மையாரிடம் கொண்டிருந்த அன்பு வாண்டு விடவில்லை. வற்றுதஉயிராருகவே பெருக்கெடுத் தோடியது.

பிறவர் ராமசாமியைப் பார்த் தவராவது "பெரியவர்; வய தேறியவர்; பிழவர்," என்று சொன்னால் உடனே அவர் நாகம் மையாரைக் காட்டி "என்னை அப்படிச் சொல்லாதீர்கள் அந் தம்மாளுக்குக் கோபம் வரும் என்பார்." அப்பொழுது பார்க்க வேண்டுமே நாகம்மாவின் ஆனந் தத்தை! அன்பு தவழும் கண்க ளால் பெரியாரின் வார்த்தையை ஆமோதிப்பார் அம்மையார்! ஆமாம்! அவர்கள் உள்ளத்தால் இளங் காதலர்கள் தான்! இல் லற வாழ்விலும் பொது வாழ்வி லும் மீங்காத் துணையாக நின்ற நாகம்மையாரை 11-5-1933ல் பெரியார் இழந்தார். ஆனால் அவர் துக்கத்தால் தூவண்டு போய்ப் படுத்துவிடவில்லை. மறு நாளே 12—5—1933ல் பெரி யார் திருச்சியில் ஒரு சிறிய்துவ திருமணத்தை 144 செக்ஷனை மீறி நடத்திவைத்து கைது செய் யப்பட்டார். காதலியும் மீறிய கடமை, பெரியாரின் வாழ்வுக்கே புது இலக்கியம் கோர்த்தது.

★

கற்பனைச்சித்திரம்!

ஒரிஜினலில் உள்ளபடி!

(மூன்றாம்.)

"இதைப் பெரிய டைப்பில் போடு."

"சரி சார்"

"கதா காலட்சேபப்!...உம். எனப்பா! "கேஸ்" என்று போ டாமல் "ட்ரே" போட்டுத் தொலைக்கிறாய்? ஒரிஜினலில் உள் ளபடி தானே உன்னைக் கம்போஸ் பண்ணச்சொன்னது?"

"....."

"அம்மன் 'பிளாக்'கை இப்படி நடுவில் போடு. இந்த ஓரத்தில் அழகாய் 'பார்டர்' கட்டி செட் டியார் 'பிளாக்'கைப்போடு."

"சரி சார்"

"உம். ஆமாம். என்ன புரி யுதா? உன் சுத்த தமிழையெல் லாம் இதிலே காட்டாதே. ஒரி ஜினலில் உள்ளபடி போடு."

"....."

"செட்டியார் பொல்லாத கோபக்காரர். உன் செந்தமிழ் நடையைக்காட்டினால் கம்ப அச் சாபீஸ் கடையைக் கட்டவேண் டியதுதான்."

"அதான் ஒருதடவை சொன் னீங்களே சார்!.....ஒரிஜினலில் உள்ளபடியே கம்போஸ் பண் றேன் சார்"

"உனக்குத் தான் மறதி ஜாஸ் தியாச்சே! உம் போ. ஒரிஜி னலில் உள்ளபடி போடு."

கம்பாசிட்டர்! கந்தசாமி வே தாந்தி பிரஸ் மானேஜர் வேலா யுதம்பிள்ளையிடம், தான் அச்சுக் கோர்த்த ஒரு 'நோட்டீஸ்' மாதி ரியை பெரிய டைப்பில் நீ தாளைக் காட்டிய போது நடந்த உரையாடல் மேலே காண்பது.

கந்தசாமி, மானேஜரால் குற் றம் சொல்லப்பட்ட, மாதிரித் தாளைக் கிழித்தெறிந்து விட்டு ஒரிஜினலை எடுத்து ஒருமுறை படித்தான்.

மணி மணியான எழுத்துக் கள். கந்தசாமியின முகத்திலே ஒரு பரிதாபம் பிரதிபலித்தது.

திரௌபதி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம். விளம்ப ரத்தின் தலைப்பு இது. சிகழ்ச்சி நிரல் என்ற பகுதியில்: ஸ்ரீஜத் யோகானந்த சுவாமிகள் பாஞ் சாலி சுயம்வரம் என்பது பற்றி உபன்யாசிப்பார்கள் என்ற குறிப்பு இருந்தது. கந்தசாமி உதடுகளைக் கடித்துக் கொண் டான். ஒரு எளனம் பிதுங் கும் குட்டிச் சிரிப்பும் அதைத் தொடர்ந்து ஒரு ஆயாசமான பெரு மூச்சும் வெளிக் கிளம்பிற்று.

"காலும் இந்தப் பிரசுக்கு வந்து ஐந்து வருஷமாயிற்று. இந்த ஆபாசம் பிடித்த புராணக் குப்பைக்கு அச்சுக் கோர்ப்பதை விட தூக்கு மாட்டிக்கொள்வது எவ்வளவோ மேல்! அட! தமிழ் எழுத்துக்களே! மலர்களே, மகா ஜனங்களுக்கு காவுகொடுக்கும் ஆட் டுக்குட்டிக்குப் போடும் மாலையா கவும் கட்டுகிறார்கள், மண மாலையாகவும் தொடுக்கிறார்கள். அதேபோல் நீங்களும் திருத்தி கும் தென்சுவைக் கவிதைகள்—

வாழ்வுக்கு வழி வகுக்கும் வசன நடைகள் புத்தகவடிவில் பின்னு கிறீர்கள். பொய்மை, சித்தலாட்டம் புனைச்சுருட்டு பொங்கி வழியும் புராணங்களும் உங்கள் சிருஷ்டியாகின்றன, ஆமாம்.... மனிதர் கையில் அலைக்கழியும் மலர்க்கூட்டம் போலத்தான் இந்தஎழுத்துக் கூட்டமும்!''

அவன் இதய அலைகள் ஓய்ந்தன. எதையோ கண்டுபிடித்து விட்ட வன்போல் கந்தசாமி கண்களை விசாலமாய்த் திறந்தான். மீண்டும் கையில் இருந்த 'ஒரிஜினலை' ஒருமுறை பார்த்தான். அதில் ஒவ்வொரு எழுத்தும் அவனை உற்றுப் பார்த்தன. அவன் உள்ளத்தில் ஊடுறுவிப் பாய்ந்தன. வாய்க்குள் உளறினான். ''மகா கும்பாபிஷேகம்! .....ம்...மட உலகம்.....'' அலட்சியம் நிறைந்த வெறுப்பு அவன் முகத்தில் கோடுகளைக் கிழித்தது. மீண்டும் தனக்குள் பேசிக் கொண்டான்.

''கொள்ளையடிக்கிற செட்டிக்கு கும்பாபிஷேகம்! .....கும்மாளம் போட்டு ஊரைக் குட்டிச் சுவராக்குகிறான். இந்தக் குருடர்களும் நம்புகிறார்கள். எனக்குத் தெரியுமே...இவன் எவ்வளவு மனிதனைக் கற்பழித்த கதை! பெரியண்ண படையாச்சி பிராணவண்ணையில் இருக்கும் போது அவர் வீட்டுப் பணப் பெட்டியை அமுக்கியதில்தானே இவன் வீட்டுக்கு ''பெரிய பண்ணை'' பட்டம் கிடைத்தது! வேதாளபுரம், வெங்கடாஜலபதி கிரீடத்தின வைரங்களைப் பெயர்த்து விற்றதில்தானே விசாலமான வீடு கட்டினான். இதையெல்லாம் மறைக்க கும்பாபிஷேகம் செய்து விட்டால் போதுமா?.....அட படுபாவி! நரகம் என்று ஒன்று இருந்தால் உன் கும்புக்கு ஒரு நாகப்பாம்பைவிட்டு கடிக்கச் சொல்லணுமேடா!.....நீ கோயில் கட்ட வந்து விட்டாய்.....கோயில்! ராமனுதன் செட்டியாரே! இரு! இரு!.....ஒருகை பார்க்கிறேன். உயிர்போனாலும் கவலையில்லை.''

கந்தசாமியின் தலை கம்பீரமாய் நிமிர்ந்தது. எதிரே நிற்கும் படைத் தலைவனைப் பார்த்து 'எடு வாளை' என இறுமாந்து உரைக்கும் பண்டைய திராவிட வீரனைப் போல கந்தசாமி நின்றான். அவனுக்கெதிரே ராமனுதன் செட்டியார் நிற்பதாக அவன் நினைவு!...பிறகு மளமளவென்று அச்சுக்கோர்க்க ஆரம்பித்தான். அவன் வாய் முணு முணுத்துக் கொண்டே யிருந்தது.

''என்ன கம்பாசிட்டர்! ஆச்சா?'' என்று அதட்டினார் மானேஜர்!

அச்சுக்கோர்த்த ''மாதிரித் தாளை'' எடுத்து நீட்டினான் கந்தசாமி.

அருமையான கட்டம், அழகான முறை—அந்த விளம்பரத் தாளின் அமைப்பே அலாதியாக இருந்தது.

அச்சுநிலையத்து வாயிலில் கார் வந்து நின்றது. ராமனுதன் செட்டியார் இறங்கி வந்தார். ''ஆச்சா?'' என்றார்; ஆவல் பார்வையுடன்! 'சில்க்' சட்டையில் நிற்காமல், வழுக்கிக் கீழே விழுந்த வெண்பட்டை எடுத்து செட்டியாரின் தோளில் போட்டு விட்டான்; பின்னல்வந்த வேலைக்காரன்! அந்த அடிமையின் நிலை கண்ட கந்தசாமியின் தொண்டைக்குழி விம்மிற்று. செட்டியார் வாயிலிருந்து எப்படி விமர்சனம் வரப்போகிறதோ என்று வாய் பிளந்தபடி நின்றார் மானேஜர்.

''பேஷ் ஜோராயிருக்கு. பத்தாயிரம் நோட்டீஸ் போடுங்க.''

''எஸ்'' மானேஜர் கூனன் போல் நின்றுகொண்டிருந்தார்.

செட்டியார் வேலைக்காரனைப் பார்த்து; ''டேய்! ரத்தினம்! இங்கேயே இருந்து நோட்டீசையெல்லாம்..... வாங்கி.....''

''சுவத்திலே ஒட்டி விடுகிறேனுங்க''

''அட மடையா!...இது ''வால் போஸ்ட்'' இல்லடா. தெருவுக்கு தெரு கொண்டுபோய் கொடுடா. பத்தாயிரம் நோட்டீசும் சாயங்காலத்திற்குள்ளே செலவாகிவிடணும்.....ஆமாம்''

''உத்தரவு எஜமான்''

மானேஜர் தலை வணங்கிக் கும்பிட்டு வழியனுப்ப ராமனுதன் செட்டியாரின் கார் பறந்தது.

''ஓய்! மிஷின் மேன்! பத்தாயிரம் நோட்டீஸ்! உடனேபோடு. 'புளூ'மையில் போடு...ம்...ஓய்! கம்பாசிட்டர்!... நோட்டீசைத் தயாராக்கிக்கொடு...சீக்கிரம்.''

மானேஜர் அவசரத்தால் குதித்து விட்டு சாப்பாட்டுக்கு புறப்பட்டார். கந்தசாமி மாதிரித் தாளுடன் உள்ளே சென்றான். அச்சுக் கோர்வையை எடுத்து இரும்புச் சட்டத்தில் பொருத்தினான். அப்போது அவன் கைகளில் சிறு நடுக்கம் காணப்பட்டது. அவன் மூதலில்

(6-ம் பக்கம் பார்க்க)

முரசொலி

திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69. மாசி 6
புதன் 18—2—48.

'அந்தி' கவியட்டும்.

சூள்ளகரிக் குணம் படைத்த ஒரு வஞ்சகப் பார்ப்பனனால் கொலை செய்யப்பட்ட காந்தியாரின் 'அஸ்தி' கரைப்பு நடைபெறும் இந்துமத முறைப்படி அதே 'புண்ய' நதிகளில் நடைபெற்று விட்டது. அண்ணல் காந்தியாரின் உடல் இவ்வளவு சீக்கிரத்தில் நெருப்பால் பொறுக்கப்பட்டு அஸ்தி கரைக்கும் நிலைமை ஏற்படும் என யாரும் எதிர் பார்த்ததில்லை. அந்தக் காரியத்தை ஆரியம் செய்துவிட்டு அந்த 'ஆனந்த சுதந்திரத்'தைக் கொண்டாடமிட்டாய்கள் வழங்கியதோடு நிற்காமல் காந்தியாரின் கொலையையும் தன் கொள்கைக்கு சாதகமாக்கிக் கொண்டு ஒரு கோரமான சுடுகாட்டை திராவிடத்தில் உண்டாக்க ஆயத்தம் செய்கிறது. அந்த இடுகாட்டிற்கு அஸ்திவாரக் கல் நாட்டுவது போல மித்தான்—இந்து ஆகிய ஆரிய ஏடுகள் விஷமப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றன. அந்தக் கல் நாட்டு விழாவை தோழர் பாஷ்யம் அய்யங்கார் நடத்தியிருக்கிறார்.

காந்தியாரைக் கொன்றவன் ஒரு பார்ப்பனன் என்ற செய்தியை பத்திரிகைகள் மறைத்துள்ள நேரத்தில் திராவிடர் கழகத்தார் அதை அம்பலப்படுத்திருக்கிறார்கள் என்பதுதான் அய்யங்காரின் இருதயத்திலே விழுந்த இடி! இந்து மித்தான் பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட இலி!

ஜவஹரைக் கொல்ல முயற்சித்தவன் யார் என்று புரியாமல் இருக்கும் போதே—அவன் ஒரு முஸ்லிம் என்ற செய்தியைப் பிரசுரித்து பல இடங்களில் இந்து முஸ்லிம் போராட்டத்தை தூண்டிவிட்டு, ஈரோடு போன்ற இடங்களில் லட்சக் கணக்கான ரூபாய் பொருள் சேதத்தை விளைவித்துவிட்டு—இன்று உத்தமர் காந்தியின் உயிரைக் குடித்தவன் ஒரு ஊதாரிப் பார்ப்பனன் என்ற உறுதியான செய்தி வெளியாகிற பொழுது ஆரியமே! நீ உறுமுவது ஏன்?

ஐயோ எங்கள் மானம் போகிறதே! ஒரு பிராமணன் கொலை செய்ததற்காக எங்கள் கோத்திரத்தையே சந்தியில் இழுக்கிறீர்களே எனக் குய்யோ முறையோவென ஒப்பாரிவைக்கும் 'இந்து' பத்திரிகையாரே! முதலில் உமது ரீலிக் கண்ணீரைத் துடையும், உமது இன வரலாற்றின் பழைய சுவடியை சற்றுப் புரட்டும்.

இதோ பாரும்.....எத்தனை சூர்களின் உயிர் உம் வர்க்கத்தின் சூழ்ச்சியால் சூறையாடப்பட்டிருக்கிறது என்பதை!..... திப்பாக்கி வந்தாத காலத்திலே தளபதிமணி மாலையையும், தர்ப்பையையும்காட்டி எத்தனை தோள் வலி கொண்டோரின் வாழ்வைத் தினைத்திருக்கிறது உமது இனம்!

களத்திலே காளையெனப் போரிட்டோரெல்லாம் உம்மினத்தவரின் சமண்டலத்திற்கு முன் கதியற்ற பிணமாயினரே!..... அவ்வளவு ஏன்?.....

மேற்றைய 'அற்பாயுள்' ஆட்சியில் கூட ஆச்சாரியார் அவர்களின் கொடுமைக் கூர் அம்புகளால் இரண்டு திராவிடச் சிங்கங்கள் குத்துண்டு மடிந்தனவே!.....

சேலத்திலே கண்ணீயும் காலியும் இழந்தவர்—உடையார் பாளையத்தில் உயிரினுமினிய மனைவி, மழலை பேசும் மக்கள் இவர்களைத் தனியே தவிக்க விட்டுவிட்டு, தணியாத சோகத்திற்கு ஆளாக விட்டுவிட்டு—அத்தான் அத்தான் என அந்த அம்மை அழ—அப்பா அப்பா என அவர் குழந்தை யழ சித்திரவதைக்குள்ளான வேலாயுதம்—இவர்களெல்லாம் உய்மினத்தின் கொள்கையை எதிர்த்ததற்கல்லவா இந்தப் பரிசு பெற்றார்கள்?

குடியேறிப் பிழைக்க வந்த உமது இனத்தினை கோரப் பற்கள் காந்தியாரையும் குதறிப் பார்த்துவிட்டு அந்த ரத்தவெறி அடங்காமல் திராவிடரின் குரல் வளைக்கும் குறிவைக்கின்றனவே!

காந்தியாரைப் பார்ப்பனன் கொன்ற செய்தியை வைத்துக் கொண்டு பார்ப்பன துவேஷத்தைக் கிளப்புகிறார்கள் திராவிடர் கழகத்தார்! ஆகவே ஆரியலார் அவர்கள் பக்கம் கண்திருப்பவேண்டும் என ஆணையிடுகிறது ஆரியம்!

உண்மையான செய்தியை வெளியிடுவது ஆரிய அகராதிப்படி துவேஷம்! இந்த அகராதி இருக்கலாமா? இருக்க விடலாமா? என்பதுதான திராவிடரைப் பார்த்து நாம் கேட்கும் கேள்வி. ஏ! ஆரிய ஏடே! காந்தியாரை தப்பித்தவறி ஒரு முஸ்லீம் கொன்றிருந்தால் இன்னேரம் இந்தியாவின் மண்ணே ரத்த

நிறமாக்கியிருப்பாயே! வங்காளக் கடலிலும்—அரபிக் கடலிலும் சவங்களை மிதக்கவிட்டுப் போர்த் திருப்பாயே! அவ்வளவு வேக மாக உன் விஷமப் பிரச்சாரம் நடைபெற்றிருக்குமே!

அதை விடுத்து.....'காந்தி யாரைக் கொன்ற பிறகாவது பார்ப்பனீயத்தை நம்பாதீர்கள் திராவிடரே!' என எச்சரிக்கை வழங்குகிறவர்கள் மேல் 'எறியுங் கள் சட்டவிரோத பாணத்தை' எனத் தூண்டுவது ஏன்? வெள் ளாட்டின் விலாவை முறித்து அதை வீழுங்கிய வேங்கை—அடுத்த வேட்டைக்கு தயாராவ தற்கு முன், எதிரே வரும் மான் குட்டிகளுக்கு எச்சரிக்கை செய் வது, 'வேங்கை—மான்குட்டி துவேஷ'த்தைக் கிளப்புவதாகும் என நினைத்துப் பேசாமலிருக்க முடியுமா?

காந்தியார் உண்மைக்காகப் பாடுபட்டார். காந்தியாரைக் கொன்றவன் பார்ப்பனன் என்ற உண்மையை நீ மறைத்தாய்? ஏன்? காந்தியார் அஹிம்சைக்காக பாடுபட்டார். காந்தியாரின் சாம் பல் கரைவதற்கு முன்பே நீ உன் சாணக்கிய வலையை வீசி அஹிம் சையைக் குலைக்க எண்ணுகிறாய். ஏன்?

"காந்தியார் பார்ப்பனரால் கொல்லப்படலாம்..... ஆனால் அதை வெளியிடுவது குற்றம்" இதுதானே உனது முடிவு! இது 'பத்திரிகை தர்மம்' அல்லவே! செய்திகளை மறைக்காமல் வெளி யிடுவதற்கு பெயர்தானே பத் திரிகை! இனவுலகத்திற்குப் பாத கம் ஏற்படும் போது செய்தியில் கத்தரிக்கோல் வேலை கடத்து வது என்பதுதான் அகில இந் திய பத்திரிகாசிரியர் மாநாட்டு ரகசியத் தீர்மானமா?

பார்ப்பனீயமே! உன் ஆதிக் கத்திற்கு அழிவு காலம் என்ற அறிகுறி தென்பட்டதும் அண்ணல் காந்தியாரை அழித் தாய். அவர் அஸ்தியைக் கரைக் கும் சடங்குகளில்—வைபவங்க ளில் உன் கொள்கையை—உன் சாஸ்திர சம்பிரதாயத்தை மீண் டும் நிலைநாட்டிக் கொண்டாய். புத்த மதத்தை ஒழிக்க புத்த ரைக் கடவுளாக்கியது போல் காந்திக் கொள்கைகளைக் கரு வறுக்க அவரையும் கடவுளாக்க கங்கணம் கட்டிவிட்டாய்.

இப்பொழுது உன்னுடைய ஒரே ஒரு எதிரி திராவிடர் கழ கத்தார். உன் காலடியில் கிடந்த விபீஷணர்கள் கூட உன் கோரச் செயலுக்குப் பிறகு கண் விழித் துப் பார்த்து உன் சூழ்ச்சிகளை சுக்கு நூறாக்க எண்ணி விட்டனர். நீ...பழைய வெங் கண்ணை வாழ்வு வாழவேண்டுமா னால்; சாணக்கிய சாம்ராஜ்யம் திருப்பிடிக்க வேண்டுமானால்; உன் இனத்தின் மேனி மெருகு கலையாமல உல்லாசமாய்-உழைக் காத சமுதாயமாய்—உண்பதும் உறங்குவதுமே பிறவியெடுத்த பயன் எனக்கொண்டு வாழ்க் கையை அமைக்க வேண்டுமா னால்; திராவிடர் கழகத்தை தீர்த்துக் கட்டியாகவேண்டும்.

அதற்குத்தான் பாஷ்யம் அய் யங்கார் பாய்ச்சலும்—இந்து பத்திரிகையின் சிந்தும்—நித்தி யானின் மிரட்டலும் நடைபெறு கின்றன. திராவிடர் கழகத் தாரின் திட்டம் பார்ப்பனரை எதிர்ப்பதல்ல! பார்ப்பனீயத்தை அழிப்பது! இதைத் தெரிந்து கொண்டும்—தெரியாத மொழி யில், தேசியப் போர்வையில் துவேஷப் பிரச்சாரத்தை துவங் கியிருக்கிறது ஆரியம்! அஞ்ச வில்லை நாம்! ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இளை கொட்டியவன் கோழை என்று கூறும் பரம் பரையில் வந்தவர்கள் நாம்! மீண் டும், ஒருமுறையல்ல; பல முறை கூறுகிறோம்; "காந்தியாரையே கொன்றது பார்ப்பனீயம்! திரா விடா இனியாவது பார்ப்பனீ யத்தை நம்பாதே!" என்று!

ஆரியப் பத்திரிகைகளின் ஆணையை அரசியலார், தலைமேற் கொண்டு திராவிடர் கழகத்தா ரின்மேல் சிறிப்பாயலாம். அந்த சிற்றமும், பாய்ச்சலும் எற்படும் பொழுது சிந்தை கலங்கி மூது கைத் திருப்புகிறவர்கள் அல்ல திராவிடர் கழகத்தார்! பார்ப்ப னீயத்தின் காதிலிருந்து பாய் ந்த குண்டுகளுக்கு மார்பைக் காட்டினர் காந்தியார்.

கருப்புச் சட்டையைக் கிழித் துக்கொண்டு எங்கள் இருதயத் தையும் பிளக்கட்டும் ஆளவந்தா ரின் "குண்டுகள்" எனக் கூறுகி றோம் நாம். ஆளவந்தவரில் பிரதம அமைச்சர் திராவிட இனத்தவர்! அவர்வீசும் "குண்டு" திராவிடர் கழகத்தினர் மார்பில் பாயட்டும். சுட்டது திராவிடர் ஆகவே இந்த சாவு சுவை தரு கிறது எனச் சொல்லிச் சாவோம். ஆரியம் காந்தியா ரைக் கொன்று அவர் அஸ்தி யைக் கரைத்தது. இதோ நாம்! ஆரியத்தின் விரோதிகள்! நம் 'அஸ்தி'யும் நம் ரத்தக் கடலில் கரையட்டும். மானத்தை இழந் தவாழ்வு இனியும வேண்டாம்!

கூத்தாதல்லூரில், 21-2-48 சனி, 22-2-48 ஞாயிறு
இரண்டு நாட்களுக்கு தூக்குமேடை நாடகம்.
தோழர்கள்:- மு. கருணாநிதி, N. S இளங்கோ, புலவர் குழந்தையா,
தோழியர் K. V. ராஜம் மற்றும் இயக்க தோழர்களும் நடிக்கிறார்கள்.

ஒரிஜினலில் உள்ளபடி!

(3-ம் பக்க தொடர்ச்சி)

கோர்த்திருந்த சில எழுத்துக் களைப்பிடுங்கினான். வேறு எழுத் துக்களைப் பொறுக்கி...அந்தக் காலியிடங்களில் அமைத்தான்.

அச்சு இயந்திரத்தில் இரும் புச்சட்டம் எறிற்று. ஒன்று... இரண்டு...மூன்று ..நூறு....ஆயிரம் பத்தாயிரம்.....'நோட்டீஸ்'கள் அடித்து முடிந்தது. கந்தசா மியே அதை எடுத்துக் கட்டிக் கொடுத்தான். வேலைக்காரத் தினம், விளம்பர சுமையோடு நடையைக் கட்டினான். செட் டியார் உத்தரவுப்படி பத்தாயி ரம் 'நோட்டீசை'யும் ஊரெங் கும் பரப்பிவிட்டுத் தான் உட் கார்ந்தது அந்த அடிமை.

மறுநாள் கும்பாபிஷேகம். தாங்கமுடியாத கூட்டம். செட் டியார் சர்வாலங்கார பூஷிதராய் தன் சகாக்களுடன் காரில் வந்து இறங்கினார். மற்றொரு காரில் ஒரு மங்கையர் கூட்டம் வந்து இறங்கிற்று. கூட்டத்தை ஒரு முறை பார்த்தார். 'எல்லாம் என் பெருமை' என்று அவரு டைய நிமிர்ந்த தலை சொல் லிற்று. ஒரு அலட்சியமான புன்னகை-வேண்டுமென்றே வர வழைத்துக் கொண்டது-அகம் பாவம் தெரிக்கும் கண்கள் அகல மாகிக் கொண்டன.

கூட்டம் அவரைப்பார்த்து விட்டது. ஓரே ஆரவாரம்!...

"ஏய்! காமனுதன் செட்டி யார்.....காமனுதன் செட்டி யார்!".....இப்படி ஒரு பேரிரைச்சல் கிளம்பிவிட்டது. அாவசியமான கை தட்டல். ஓரே கையாண்டிச் சிரிப்பு. இடையே "காமனுதன் செட்டி யாரே! போகாநந்த சுவாமிகள் எங்கே?" என்ற கேள்விகள். "பொருத்தமான பெயர்களப்பா .....காமநாதன்— போகாநந் தர்....." இப்படி ஒரு விமர் சனம். மீண்டும் கைதட்டலும் சிரிப்பும். "கண்ட பெண்களைகற் பழிக்கும் காமநாதன் செட்டியா ருக்கு" என்ற ஒற்றைக்குரல் இதைத் தொடர்ந்து 'ஜே ஜே! கோஷம். இதற்குள் ஒன்றும் புரியாத சிறுவர்கள் 'திரு திரு' வென விழிக்கும் செட்டியாரைப் பணக்காரப் பைத்திய மென் றெண்ணி வீசிய சிறுசிறுகற்கள். எல்லாம் சேர்ந்து பெரிய குழப் பத்தை.....போலீசாரின் குண் டாந்தடிப் பிரயோகம் வரையில் கொண்டுவந்து விட்டன. செட் டியாரின் முகத்தில் விளக்கெண் ணெய் வடிந்தது. "கும்பாபிஷே கமும் வேண்டாம் எழவும் வேண்டாம் திருப்புடா காரை" என்று கர்ஜித்தார். கார்கள் கல் மாரியோடு திரும்பின. செட்டி யார் தோற்றோடுகிறார் என்ற நினைப்பில் மீண்டும் பலத்த கா கோஷம்!.....

'லக்ணம்' தவறக்கூடாது என்ற சாஸ்திரிகளின் முடிவுப் படி செட்டியார் இல்லாமலேயே கும்பாபிஷேகம் நடைபெற்றது. நிகழ்ச்சி நிலில் கண்டவாறு யோகானந்த சுவாமிகள் உபன் யாசத்திற்காக செட்டியார் வீட் டில் வந்து இறங்கினர். செட்டி யார் சோக உருவமாக சாய்ந் திருந்தார். யோகானந்த சுவா மிகள் முகத்திலும் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"செட்டியார் வாள்!...என்னை அவமானப்படுத்த எத்தனை நாள் எண்ணியிருந்தீர்?" என்று ஆத் திரத்தை அள்ளிக் கொட்டினார் சுவாமிகள்.

"என்ன? சாமி!.... புரியாமல் பேசுது!" என்றார் சாவதான மாக செட்டியார்.

"இதோபாரும்"

யோகானந்தசுவாமிகள் விளம் பரத்தாளை எடுத்து செட்டியாரி டம் வீசினார்.

"திரௌபதி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம்" செட்டி யார் படித்தார்.

"இதற்கென்ன சுவாமி?'

முழுவதும் படியும் ஐயா!"

செட்டியார் படிக்க ஆரம்பித் தார்.

"ஸ்ரீஜத் போகானந்த சுவா மிகள் பாஞ்சாலி விபசாரம் என் பது பற்றி உடன் யாசிப்பார் கள்"...அடாடாடா!... யோகா னந்தர்—போகானந்தர் ஆகியி ருக்கு! பாஞ்சாலி சுயம்வரம்— பாஞ்சாலி விபசாரம் என்று மாறியிருக்கு. உபன்யாசிப்பார் கள் என்பது உடன் யாசிப்பார் கள் என்று இருக்கு!.....இது எந்த அயோக்கியன் செய்த வேலை" செட்டியார் கிம்மம் போல் உறுமினர். யோகானந்த சுவாமிகளுக்கு வாய் பேசாம லேயே கையும் காலும் ஆடின. அப்போது எதையோ புதிதாகக் கண்டு பிடித்த கணக்கப்பிள்ளை "இதோ பாருங்க இதோ பா ருங்க" என்று 'நோட்டீசை'க் காட்டினார்.

"இப்படிக்கு அம்பாள் ஊழி யர் காமனுதன் செட்டியார்"

(8-ம் பக்கம் பார்க்க)

"மதமெனும் பேய் பிடியாதிருக்கவேண்டும்"—இராமலிங்கர்.

வாழ்க இலங்கை!

(இராவணன்)

கத்தியின்றி, ரத்தமின்றி, சத்தமின்றி—ஆனல்-கொட்டுமுழக்குடன், கப்பல்களின் சங்கநாதம் வானமுட்ட, ஒன்றன்பின் ஒன்றாக 19 மரியாதைக் குண்டுகள் வெடிக்க இலங்கை கடந்த 4-ந் தேதியன்று டொமினியன் அந்தஸ்து பெற்றவிட்டது!

இங்கையின் அரசியல் துறைகளிலே 1910-லிருந்து பழகி, பின்னர் கவர்னராயிருந்த சர். ஹென்றி மாங்க் பாலன் மூர் இலங்கையின் முதல் கவர்னர் ஜெனரலாகவும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு விட்டார். புதிய இலங்கையின் பாராளுமன்றம் பிரிட்டிஷ் மன்னரின் உடன் பிறப்பாளர் கிளொவ்ஸ்டர் கோமகனல் புதனன்று திறந்து வைக்கப்பட்டு விட்டது.

புத்தமத வாதிகள் முப்பது லட்சம், இந்துக்கள் பத்துலட்சம், கிருஸ்துவர்கள் ஐந்து லட்சம், முஸ்லிம்கள் மூன்றரை லட்சமாகக் கொண்ட இலங்கையின் பரப்பு சற்றேறக் குறைய 25000 மைல்கள் உள்ளது. இலங்கை, இந்தியாவைப் போன்று இரத்தத்தை சிந்தியோ, குமரன்களை, சிதம்பரங்களை, பகவத்சிங்குகளை பலியிட்டோ, பாஞ்சால படுகொலைகளைக் கண்டோ அதன்பின் இந்த குடியேற்ற நாட்டந்தஸ்தை பெறவில்லையென்றாலும், அந்த நிலைமையை அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர் தாராளத்தினாலேயோ, ஹிந்து மனப்பான்மையாலேயோ பெற்றுவிடவில்லை. ஆட்சிப் பரிவை சமக்க வலுவின்றி வற்றிஉலர்ந்திருந்தாலும், வறட்டு ஜம்பத்தைமட்டும்விடாது இருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய—பாகிஸ்தான் நாடுகளுக்கு அளித்த குடியேற்ற நாட்டந்தஸ்தின் எதிரொலியும், இந்தோனேஷியா, பிரஞ்சு இந்தோசீனு ஆகிய இந்துமகா சமுத்திரப் பிரதேசங்களில் ஏற்பட்ட-வெற்றிகண்ட சுதந்திரக் குமுறலின் சூழ் நிலையுமே இன்று இலங்கையும் புது வாழ்வு காணும் நிலை யேற்பட்டதற்கு காரணம் என்று கூறலாம்.

பர்மாவைப் போன்று பூரண சுயேச்சையும் பெறுது 'இந்தியா' பாகிஸ்தானைப் போன்று—பிரிட்டிஷ் அரசாங்கம் 1947 ஜூன் 18ல் வெளியிட்ட அறிக்கையின் பயனக இலங்கை 'டொமினியன்' மதிப்பை மட்டுமே பெற்றிருக்கிறது.

'டொனமூர்' அரசியலமைப்பு சீர்திருத்தப்படி இலங்கைமக்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை யென்ற ஜனநாயக அடிப்படையின் மீது கடைபெற்ற 1931 தேர்தலுக்கு பிறகு ஓளவு சுயேச்சை இன்பங்களை பெற்றனர். ஆனல் பின்னர் ஏற்பட்ட, 'கமிட்டி முறைகொண்டு ஆட்சி செய்வது என்ற முறை' மந்திரி சபையில் கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்த வில்லை யென்பதோடு வழக்கம் போல கவர்னர் தனது விசேஷ அதிகாரம் என்ற வில்கொண்டு எதேச்சாதிகார விஷ பாணங்களை விசி வேடிக்கைகள் செய்யவுமான நிகழ்ச்சிகளுக்கு ஏது வாயிற்று. இந்த பித்தலாட்ட முறைகள் இன்றைய 'புது இலங்கையில்' இனி தாண்டவம் புரிய இயலாது என்பது மகிழ்ச்சிக்குரியதே!

"சோல்பரி" கமிஷன் அரசியலமைப்பின் அடிப்படையில் புது இலங்கை வாழ்வில் புது அரசியல் அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற இலங்கை பொதுத் தேர்தலில் ஓளவு பெரும்பான்மை பிரதிநிதித்துவம் பெற்று, அரசியல் ஆட்சியில் நுழைந்திருக்கும் டி. எஸ். சேனநாயக, (பிரதமர்) தனது கடமை பற்றி, இலங்கையின் புது வாழ்வு தொடக்க நாளன்று சொற்பொழிவாற்றுகையில், இலங்கை வாழ் சிறுபான்மையினருக்கு பயமோ, தயாமோ ஏற்படாத வகையிலேயே எதிர்கால இலங்கையின் அரசியல் நடக்கும் என்று பன்முறை வலியுறுத்தி யுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை சட்டசபையின் மொத்த உறுப்பினர்கள் 95 பேரில் அவரது ஐக்கிய தேசிய கட்சியின் (United National Party) சார்பில் வந்தவர்கள் தொகை 42 தான்! சுயேச்சைக் கட்சியினர், தமிழர்கள், இடதுசாரிகள் ஆகியோரும் சட்டசபையில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர். இலங்கையின் எதிர்காலம் சிறந்த முறையில் திகழுமென நாம் நம்பும் காரணம், மேலைநாட்டு பண்பாடுகளையே ஓட்டி அவைகளைத் தங்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலக்கச்செய்து இலங்கை மக்

(8-ம் பக்கம் பார்க்க)

ஓரிஜினலில் உள்ளபடி!

(6-ம் பக்க தொடர்ச்சி)

என்ற கொட்டை எழுத்துக்கள் அவை! ராமலிங்கம் செட்டியார் எழுந்து அகோர சுத்தனத்தை ஆரம்பித்து விட்டார் பல்லைப் படபட வென்று கடித்துக் கொண்டார்.

'அச்சாபீசுக்காரன் உண்மையைத்தான் போட்டிருக்கிறான்' என்று (சொல்லவில்லை) தனக்குள் எண்ணிக் கொண்டார் கணக்கப்பிள்ளை.

"எய் டிரைவர் காரை எடு" செட்டியார் உத்திரவு.

* * *

வேதாந்தி பிரசின் முன்னே கார் நின்றது. மானேஜரும், யாளிகள் புகுந்த வெண்கலக் கடையாயிற்று.

"எய் கம்பாசிட்டர்! டேய்" என்று 'ருத்ரகாளி'மாக அழைத்தார் மானேஜர் வேலாயுதம் பிள்ளை.

கம்பாசிட்டர் கந்தசாமி வந்து நின்றான்.

ஓங்கி ஒரு அறை—கந்தசாமி மானேஜரால் தாக்கப்பட்டான். அடிபட்ட கந்தசாமி அழுவுமில்லை ஆத்திரப்படவுமில்லை. சிரித்தான்.

"என்னடா சிரிக்கிறாய்..... கழிப்பயலே" மானேஜர் கோட்டை அவன் முகத்தில் எறிந்தார்.

"ஒன்றுமில்லை சார், ஓரிஜினலில் உள்ளபடியே அச்சுக் கோர்த்திருக்கிறேன்."

"ஓரிஜினலா? எதுடா ஓரிஜினல்! ஓரிஜினலில் பாஞ்சாலி விபசாரம் என்று தான் போட்டிருக்கோ?"

"ஆமாம்...இதற்கு உண்மையான ஓரிஜினல் பாரதம்! இந்தக் கை எழுத்து கோட்டோ அல்ல! ..... பாரத ஓரிஜினலில், ஐவருக்கும் தெவியாகவும்—ஆருவது புருஷனை கர்ணன் மேல் ஆசை கொண்டவளாகவுந் தான் பாஞ்சாலி சித்தரிக்கப் பட்டிருக்கிறாள். அந்த லட்சணப்படி பாஞ்சாலி சுயம்வரத்தை விட பாஞ்சாலி விபசாரம் என்று போடுவதுதான் எனக்கு சரியான ஓரிஜினலாகத் தெரிந்தது.

அதுமட்டுமல்ல..... இந்த... செட்டியார், காமக்கண்டாமிருகம்! அதுதான் இவர் வாழ்க்கை வரலாற்றின் ஓரிஜினல்! அதன்படி காமலிங்கம் செட்டியார் என்று "கமபோன்" செய்தேன்.

உபன்யாசத்திற்கு வரும் சாமியார் ஒரு போகப் பூனை. அவன் பகலில் பரம பக்தன். இரவில் பரம பாதகன். இந்த உண்மை ஓரிஜினலை நான் மாற்றி விரும் பாமல்.....போகானந்த சுவாமிகள் என்று போட்டேன்.....இது குற்றமா?" கந்தசாமி கலகலவென சிரித்தான்.

"ஆ!" மானேஜர் வாயைப் பிளந்தார்.

பொறும். நீர்தானே சொன்னீர்..... ஓரிஜினலில் உள்ளபடி போடு என்று!".....கந்தசாமி மீண்டும் சிரித்துக்கொண்டே வேதாந்தி பிரசைவிட்டு வெளியேறினான்.

செட்டியாரும்—மானேஜரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

★ ★ ★

தேவை.

அச்சகத்திற்கு கிளார்க் ஒருவரும், திறமையிக்க பைண்டர் ஒருவரும் தேவை:

விபரத்திற்கு:-

கருணாநிதி அச்சகம்,
விஜயபுரம்.

வாழ்க இலங்கை

(7-ம் பக்க தொடர்ச்சி)

கள்—பெரும்பாலோர்—சிங்களவர்கள் வாழ்பவர்கள் என்பதல்ல! தற்பொழுது தாங்கள் சர்க்கார் மூலம் சாதிக்கப்போவதாகச் கூறும் முறைகளும், குறிப்பாக ஆங்காங்கே சர்க்கார் பொறுப்பாலேயே தேசிய மொழியை முதல் மொழியாகவும், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் கொண்டு தேசியப் பள்ளிகள் (National Schools) திறுவப்போவதாக் கூறுவதுபோன்ற முற்போக்கு கோக்கங்கள் கொண்டதான்!

இலங்கையில் சிறுபான்மையினராக எண்ணற்ற தமிழர்கள் வாழ்கின்றனர். இலங்கையின் புராதன வாழ்வில் "இடைக்கால பேதங்கள்" புகுந்திருந்தாலும் இலங்கை நமது சகோதரியாகும். நமது சகோதரியின் நரம்புகளிலும், தமிழ் இரத்தம் ஓடிக் கொண்டுதானிருக்கும். ஆகவே புது வாழ்வு அரும்பியிருக்கும் இலங்கையில் தமிழர்களின் வாழ்விலும் மணம் வீசும் என்பதில் ஐயமில்லை! வாழ்க இலங்கை!

ஆசிரியரும் வெளியிடுபவரும்:
மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால்
கருணாநிதி (மின்னியக்க)
அச்சகம், விஜயபுரம்.

"கோயில் விபசார விடுதி"—திரு. காந்தியார்.